நிலை வந்துவிடக் கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் போர்க்கால நடவடிக்கையாக எடுத்துச் செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து அறிக்கை பெறப்பெற்று இது பற்றி இந்த ஆண்டு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 473, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

473—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல்.

*11177—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் பழைய, புதிய கிணறுகள் ஆழப்படுத்த மற்ற கிணறுகளிலிருந்து 450 அடி தூரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையால் அரசின் மானியக் கடன்கள் வாங்குவதில் விவசாயிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அடிக் கணக்கை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவ்ட்டத்தில் வங்கிகள், புதிய கிணறு தோண்டுவதற்கும் பழைய கிணற்றை ஆழப் படுத்தவும் கடன் வழங்கும் போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையே இருக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச இடைவெளி தூரம் 150 மீட்டர் (492 அடி) ஆகும். இந்த தூரம் தமிழ்நாடு அரசு நில நீர்த்துறையைக் கலந்து இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கும் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 26]

(ஆ) இடைவெளி தூரத்தை 150 மீட்டரிலிருந்து குறைப்பது பற்றி நில நீர்த்துறை ஆய்வு நடத்தி வருகின்றது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி முடிவெடுக்க பரிந்துரை செய்யுப்படும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனை மானியக் கடன் பெறுபவர்களுக்கு மட்டுமே விதிக்கப்படுகிறது. தனியார்கள் மற்றும் வங்கிகளிலிருந்து கடன் பெற்று கிணறு தோண்டுகிறவர்களுக்கு இந்த நிபந்தனை விதிக்கப்படுவதில்லை. தனியார்கள் இடையிலே கிணறு தோண்டிவிட்டால் கூட, மற்றவர்களுக்கு மானியக் கடன் மறுக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஏழை எளியவர்கள் தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தனியாருக்கும் இந்த நிபந்தனையை விதிக்க அரசு முன் வருமா? அல்லது ஆய்வின் முடிவில் இந்த நிபந்தனையை அறவே நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் நிலவள வங்கிகளிலிருந்து கடன் வாங்க விரும்புகிறார்களோ, அவர்களுக்குத்தான் இந்த நிபந்தனையை விதிக்கிறோம். கடன் வாங்காதவர்கள், மாண்புமிகு துணைத் தலைவர் சொன்னதைப் போல, அவர்கள் இஷ்டத்திற்கு கிணற்றை வெட்டிக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் சேர்த்து இதை விதிக்க வேண்டும் என்று சொன்னால், இதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தான் செய்ய வேண்டும். நில நீர்த் துறை தான் இதைச் செய்ய வேண்டும். ஆய்வைப் பொறுத்த வரையில் இப்போது நில நீர்த் துறை ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறது. இந்த இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்று கோருகின்ற அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 474, திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை.

வினா எண் 475, திரு. கே. ஏ. மனோகரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 476, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.